DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புதன்கிழமை 29ம் நாள் சாட்சியாகிய அருள் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அருள் | வயது | 48 |
| த/பெ. | எத்திராஜ் | இனம் | ஆண் |
| கிராமம் | மேல்பாக்கம் | தொழில் | சர்வேயர் |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.27/2024**

(1 முதல் 3 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்.)

**<u>முதல் விசாரணை 29.01.2025 அ.சா.2</u>**

1. நான் மேல்பாக்கத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 ஓவியா எனது மனைவி. 04.06.2021ம் தேதி காலை 10.00 மணிக்கு எனது வீட்டிற்கு அருகே கருணாகரன், துளசி, சித்ரா, கமலகண்ணன் ஆகியோர்கள் குப்பையை கொட்டிக்கொண்டு இருந்தார்கள். எனது மனைவி இது பற்றி கேட்டபோது எங்களிடம் சண்டைக்கு வந்தார்கள்.

2. கருணாகரன், கமலகண்ணன் எனது மனைவியை அடித்தார்கள். சித்ரா, துளசி அசிங்க, அசிங்கமாக பேசி கொலை மிரட்டல் விடுத்தார்கள். அன்றை தினமே என மனைவி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். போலீசார் விசாரணை செய்து வழக்கு போடுவதாக சொன்னார்கள். 06..06.2021ம் தேதி போலீசார் வந்து வழக்கு பதிவு செய்தார்கள்.

3. கருணாகரன் அரசு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து இருந்தார். அந்த இடத்தை சர்வேயர் என்ற முறையில் 2015ம் வருடம் அளந்ததால் எங்களுக்கும், கருணாகரனுக்கும் விரோதம் இருந்தது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.